தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 26-2-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## விளையாட்டில் பங்கேற்பு மூலம் கடமையுணர்ச்சியும் பொறுப்பும் வளரும் -விளையாட்டுப் போட்டிகள் இறுதி விழாவில் சிறப்பு விருந்தினர் பேச்சு

16வது அகில இந்திய விளையாட்டு தடகள போட்டிகளின் நிறைவு விழா நிகழ்ச்சி வேளாண் பல்கலை விளையாட்டு அரங்கில் 26-2-2016 (இன்று) நடைபெற்றது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக முதுகலை கல்வி முதன்மையர் முனைவர் ச.மோகன் அவர்கள் வரவேற்றார். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக முதன்மையர் (வேளாண்மை) முனைவர் ச. மகிமைராஜா அவர்கள் 16வது விளையாட்டுப் போட்டிகள் குறித்து அறிக்கை வாசித்தார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கு. ராமசாமி அவர்கள் தன் தலைமையுரையில் இதுவரை நடந்த போட்டிகளில் அதிக எண்ணிக்கையில் பல்கலைக்கழகங்கள் கலந்து கொண்டது இதுவே முதன்முறை. 27 வயதுக்கு கீழ் உள்ள இளைஞர்கள் இந்தியாவில் 92 கோடி பேர் உள்ளனர். அவர்கள் உணவு உற்பத்தியை பெருக்குவதோடு இல்லாமல் குழந்தைகளின் சத்துப் பற்றாக்குறை போக்க முயல வேண்டும் என்றார். வளமான மக்கள் சக்தியால் மட்டுமே நலமான இந்தியாவை உருவாக்க முடியும் என்று கூறினார்.

தமிழ்நாடு டாக்டர். அம்பேத்கார் சட்டக்கல்லூரி துணைவேந்தர் முனைவர் பி. வணங்காமுடி அவர்கள் தனது வாழ்த்துரையில் அறிவு, செல்வம், வீரம் எல்லாம் ஒருங்கே வேளாண் பல்கலை மாணவர்களிடம் அமைந்துள்ளது என்றார். உலகமே வேளாண்மையை எதிர்நோக்கி காத்திருக்கிறது. 2500 மாணவ பங்கேற்பாளர்கள் மூலம் ஒருங்கிணைந்த இந்தியாவைக் காண முடிகிறது என்றும் கூறினார்.

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் ஏ.எம். மூர்த்தி அவர்கள் தென்கிழக்கு ஆசியாவில் முதன் முறையாகவும், உலகிலேயே மூன்றாவதாகவும் தமிழ்நாட்டில் தான் விளையாட்டுப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டதாக பெருமையுடன் கூறினார். தேசிய அளவில் பங்குபெறும் விளையாட்டு போட்டியாளர்களுக்கு உதவித் தொகையும் வழங்கப்படுவதாகக் கூறினார். சாதி, மொழி, இன பேதம் அற்றது விளையாட்டு என்று கூறினார். விளையாட்டில் பங்கு பெற்றால் சகிப்புத்தன்மை வளரும் என்றார். இந்திய அரசும் புதிய விளையாட்டுக் கொள்கைகளை வடிவமைத்து வருகிறது. அதற்கு விளையாட்டுப் பங்கேற்பாளர்கள் அனைவரும் கருத்து தெரிவிக்க வேண்டும் என்றார்.

நாசிக் காவல்துறை ஆணையர் திரு. எஸ். ஜகநாதன் அவர்கள் தனது சிறப்பு விருந்தினர் உரையில் 33 வருடங்களுக்கு முன் இதே விளையாட்டரங்கில் தான் பங்கேற்று விளையாடியதை நினைவு கூர்ந்தார். வேளாண் பல்கலைக்கழகங்களில் பயிற்றுவிக்கப்படும் பாடத்திட்டத்தில் அனைத்து துறைகளிலும் பயிற்சி அளிக்கப்படுவதால் ஆராய்ச்சி, கல்வியாளர்கள், பொதுத்துறை நிறுவனங்கள், அரசு அலுவலர்கள், விஞ்ஞானிகள், சொந்தத் தொழில் எதுவானாலும் வேளாண்மை மாணவர்கள் சாதிப்பதாகக் கூறினார்.

வருடத்திற்கு 40 பில்லியன் டாலர் அந்நிய செலாவணி வேளாண் பொருட்கள் ஏற்றுமதி மூலம் வருவதாகக் கூறினார். இதற்கு காரணமான விவசாயப் பெருமக்கள் தன் நிலையில் உயர அனைத்து வேளாண்மை பயிலும் மாணவர்களும் முயற்சி செய்ய வேண்டும் என்றார். விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பவர்கள் கடமை உணர்ச்சியும், பொறுப்புணர்வும் மிக்கவர்களாக விளங்குவர் என்றார். வெற்றி பெற்றவர்கள் எளிமையாக இருக்க வேண்டும் என்றும் தோல்வி அடைந்தவர்கள் அடுத்த வெற்றிக்கு முயல வேண்டும் என்றார். இளைஞர்கள் அனைத்து துறைகளிலும் புதுமையை புகுத்த பாடுபட வேண்டும் என்றார்.

16வது அகிய இந்திய விளையாட்டு போட்டியில் அனைத்து தடகள, விளையாட்டு ஒட்டுமொத்த வெற்றி பெற்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் முதன்மையாக திகழ்கிறது. செல்வி ஷிபாணி தேசிய அளவிலும், செல்வி ரம்யா உலக அளவிலும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கின்றனர்.

பின்னர் செய்தி மடல் மற்றும் விழா சிறப்பு மலரை வேளாண் பல்கலை துணைவேந்தரும் சிறப்பு விருந்தினரும் வெளியிட்டனர்.

பின்னர் நினைவுப் பரிசு வழங்கப்பட்டு, மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளுடன் விழா நிறைவு பெற்றது. முனைவர் ஜி. ராகவன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்